# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் - 05.10.2026

## முன்னிலை

## திரு வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்., மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண்.CP-2486-G-2024**

திரு. R. தேவராஜன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குடியாத்தம் வட்டம்
வேலூர் மாவட்டம்- 632602. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 17.05.2024 |
| மனுதாரரின் புகார் (CP) மனு நாள் | 22.06.2024 |

****

## ஆணை

இவ்வழக்கு இன்று (05.10.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு. R. தேவராஜன் என்பவர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி த.தனலட்சுமி தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குடியாத்தம் வட்டம், வேலூர் மாவட்டம் என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், குடியாத்தம் தாலுக்கா ராமாலை கிராமத்தில் உள்ள தங்கள் பட்டா எண்.681,714ல் உள்ள நிலத்தை அளந்து அத்துகாட்டுமாறு Online மூலம் பணம் செலுத்தி சலான் அனுப்பப்பட்டுள்ள மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை ஒளி நகல்கள் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 12 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் புகார் மனு இன்று (05.10.2026) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.மூ.மு.பி1/2682/2024 நாள் 30.10.2024, ந.க.எண்.மூ.மு.பி1/2762/2024 நாள் 04.03.2024, 23.01.2026 மற்றும் வட்டாட்சியர் அவர்களின் ந.க.எண்.மூ.மு.பி1/756/2025 நாள் 21.04.2025, வட்டதுணை ஆய்வாளர் அவர்களின் ந.க.எண்.சி1/150/2026 நாள் 08.08.2026, 19.08.2026 ஆகிய தேதியிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், மேற்படி, தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளதுவரையில் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள முழுமையான தகவல்களை பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரர் கோரிய தகவலுக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் முழுமையான தகவல்களாக இல்லை என இவ்வாணையம் கருதுகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-

- ***மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களான குடியாத்தம் தாலுக்கா ராமாலை கிராமத்தில் பட்டா எண்.681,714ல் உள்ள நிலத்தை அளந்து அத்துகாட்டுமாறு Online மூலம் பணம் செலுத்தி சலான் அனுப்பப்பட்டுள்ள மனு குறித்து உதவி இயக்குநர் நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் மாவட்டம், அவர்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 18(3)(b)-ன்கீழ் (1) வட்டத்துணை ஆய்வாளர், குடியாத்தம் வட்டம், வேலூர் மாவட்டம், (2) தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குடியாத்தம் வட்டம், வேலூர் மாவட்டம் மற்றும் மனுதாரர் ஆகியோரை அழைத்து, கள ஆய்வு செய்து, உரிய விசாரணை மேற்கொண்டு அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் நகல்களை 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய விரைவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு விசாரணை அறிக்கையின் நகல்களை அனுப்பிவைத்து, அவற்றை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் இக்கோப்பு தொடர்பான அனைத்து ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 02.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் உதவி இயக்குநர் குடியாத்தம் வட்டம், வேலூர் மாவட்டம் ஆகிய அலுவலருக்கு இவ்வாணையத்தின் வாயிலாக உத்தரவிடப்படுகிறது. மேலும், 02.11.2026 அன்றைய தினம் தவறாமல் இவ்வாணையத்திற்கு வரவேண்டுமென்று மனுதாரருக்கு இவ்வாணையத்தின் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது.***

ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.CP-2486-G-2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குடியாத்தம் வட்டம்
வேலூர் மாவட்டம்- 632602.

வட்டத்துணை ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குடியாத்தம் வட்டம்,
வேலூர் மாவட்டம்,

- **<u>உரிய விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு</u>**
  உதவி இயக்குநர்
  நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
  மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
  வேலூர் மாவட்டம்,

**<u>மனுதாரர் CP-2486-G-2024</u>**
திரு. R. தேவராஜன்
18,முதல்குறுக்கு தெரு,
வெங்கடேஸ்வரா நகர்,
திருநகர்,
காட்பாடி,
வேலூர் - 632006
Phone : 9442547605

Copy to: File
VPS /PA 07.10.2026